Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, APRIL 23 2025

புதன்கிழமை ஏப்ரல் 23, 2025 | ஒளி: 10 கதிர் 204 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# அர்ச்சுனாவுக்கு அழைப்பாணை



வீதி விபத்தில் ஒருவரைத் தாக்கி பலத்த காயங்களை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா ராமநாதனை செப்டம்பர் 25 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க செவ்வாய்க்கிழமை (22) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



# போப்பின் இறுதி சடங்கு 26 ஆம் திகதி இடம்பெறும்

திங்கட்கிழமை (21) காலை 7.30 மணியளவில் நித்திய இளைப்பாற்றியடைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிசின் திருவுடலுக்கு சிவப்பு நிற குருத்துவ உடை மற்றும் தலையில் கிரீடம் அணிவிக்கப்பட்டு, கைகளில் செபமாலையுடன் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த பாப்பரசர் நித்திய இளைப்பாற்றுதல் அடைந்த வத்திக்கானில் உள்ள அவரது இல்லமான காசா சாண்டா மார்ட்டாவின் தேவாலயத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடல் 23 ஆம் திகதி புதன்கிழமை வத்திக்கான் நேரப்படி காலை 9 மணிக்கு சென் பீட்டர்ஸ் பசிலிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டு, 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இறுதிச் சடங்கு நடைபெறும் வரை அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இறுதிச் சடங்கில் கார்தினால்மார்கள், பேராயர்கள், ஆயர்கள் மற்றும் அருட்தந்தைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்வார்கள்.

கார்தினால்கள் குழுவின் தலைமை கர்தினால் ஜியோவானி பாட்டிஸ்டா ரே தலைமையில் இறுதிச் சடங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என ஹோலி சீ பத்திரிகை அலுவலகம் அறிவித்துள்ளது.

அவரது திருவுடல், சாண்டா மார்ட்டா இல்லத்தின் தேவாலயத்தில் தற்போது வைக்கப்பட்டுள்ளது, அங்கு அவர் 12 ஆண்டுகால போப்பாண்டவராக வாழ்ந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை நடைபெற்று வருகிறது

# “பீதி தேவையில்லை”



கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்களின் மூளையாக செயல்பட்டவர்களை அம்பலப்படுத்தும் பொறுப்பை குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் நீதிமன்றங்களிடம் ஒப்படைப்போம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான விசாரணை நடைபெற்று வருகின்றது ஆகையால், யாரும் பீடியடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், செவ்வாய்க்கிழமை (22) அன்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் முறையாக நடைபெற்று வருகின்றன. சரியான திகதிகளை வழங்குவது சாத்தியமில்லை. நாங்கள் ஆணையின்படி செயல்படுகிறோம்.

இந்த சதியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டவர்களின் அமைதியின்மை குறித்து அரசாங்கம் கவலைப்படவில்லை. எதிர்காலத்தில் கம்மன்பில பாணியிலான அமைதியின்மை மேலும் மேலும் அதிகரிக்கும்.

ஆனால், அரசாங்கம் அந்த அமைதியின்மையில் கவனம் செலுத்தவில்லை. விசாரணைகள் முறையாக நடைபெற்று வருகின்றன.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை மிகவும் சிக்கலான பணி என்றும் அமைச்சர் கூறினார். அது தொடர்பான தகவல்கள் தற்போது வெளியாகி வருகின்றன என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய குழு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் நால்வர் கொண்ட பொலிஸ் குழுவொன்றை நியமித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மானதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில், செவ்வாய்க்கிழமை (22) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட இந்த குழுவிற்கு தலைமை தாங்குகின்றார். சிஐடிக்கு பொறுப்பான பிரதிபொலிஸ்மா அதிபர், சிஐடியின் இயக்குநர், பயங்கரவாத விசாரணை பிரிவின் இயக்குநர் ஆகியோரும் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

பிரதான குழுவின் கீழ் மேலும் பல உப-குழுக்களை உருவாக்கியுள்ளோம் ஆணைக்குழுவின் அறிக்கையை பிரதான குழு ஏற்கனவே ஆராய ஆரம்பித்துள்ளது.

66,000-68,000 பக்கங்களை கொண்ட அறிக்கையை ஆராய்ந்த பின்னர் கிடைக்கும் புதிய விடயங்கள் குறித்து புதிய விசாரணைகளை முன்னெடுப்போம். அதனடிப்படையில்,



தொடர்ச்சி P2

# கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பாப்பரசராக தெரிவாகலாம்?

சர்வதேச ஊடகங்கள் தகவல்

இலங்கையின் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் அடுத்த பாப்பரசராக தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இடத்தை நிரப்பக்கூடியவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ள வொசிங்டன் எக்ஸாமினர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துடன் பிலிப்பைன்சின் கர்தினால் லூயிஸ் டக்லே, பிரான்சின் கர்தினால் ஜீன் மார்க் இத்தாலியின் கர்தினால் பியட்டிரோ பரோலின் ஆகியோரின் பெயர்களையும்



தொடர்ச்சி P2

# “கொழும்பு இலங்கையின் இதயம்”

மக்கள் செலுத்தும் வரிப் பணத்திற்குப் பெறுமதி இருக்க வேண்டும் என்றும், அந்த பணத்திற்கு என்ன நடக்கிறது என்பதை கண்டறிய மக்களுக்கு உரிமை உண்டு என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கூறினார்.

கொழும்பு ஹேவ்லொக் பிளேஸில் உள்ள மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் அருகே உள்ள கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (21) நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலில் நடைபெற்ற ஆசீர்வாத பூஜையிலும் பிரதமர் பங்கேற்றார்.



இங்கு பிரதமர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“கொழும்பு நகரம் பல்வகைமை நிறைந்த ஒரு நகரம். இந்த சிறிய நிலப் பரப்பில் பல்வேறு இனங்கள், மதங்கள் மற்றும் வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.” கொழும்பு நகரம்,

தொடர்ச்சி P2

# 241 முறைப்பாடுகள் பதிவு

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 241 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 187 முறைப்பாடுகளும்

தொடர்ச்சி P2

# கெஹலியவுக்கு எதிராக ட்ரயல்- அட்- பார்

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை வாங்கிய சர்ச்சைக்குரிய விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு உட்படுத்த, மூன்று நீதிபதிகள் அடங்கிய ட்ரயல்- அட்- பாரை நியமிக்குமாறு சட்டமா அதிபர்,



தொடர்ச்சி P2

# சீன தூதுக் குழு சபாநாயகரைச் சந்தித்தது

சீனாவின் ஷாங்காய் நகராட்சி மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் துணைத் தலைவர் ஜாங் குவான் (Zhang Quan) தலைமையிலான தூதுக் குழுவினர் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்னவை பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (21) சந்தித்தனர். இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

தொடர்ச்சி P2



# ஸ்ரீ தலதா வழிபாட்டு பக்தர்களிடம் வேண்டுகோள்

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெறும் புனித தந்த தாவை தரிசிக்க வரும் பக்தர்களிடம், ‘கிளீன் ஸ்ரீ லங்கா ‘ திட்டம், வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதனடிப்படையில், புனித தலதா மாளிகைக்கு வழிபாட்டிற்காக வரும் பக்தர்கள், பொலிதீன் உள்ளிட்ட உக்காத பொருட்களைக் கொண்டு வருவதைத் தவிர்க்குமாறும், தலதா மாளிகையைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலின் தூய்மையைப் பராமரிப்பதில் அதிகபட்ச கவனம் செலுத்துமாறும், குப்பைகூளங்களை உரிய இடங்களில் மாத்திரம் கொட்டுவது தொடர்பில் கூட்டாகத் தலையீடு செய்து பிரஜைகள் என்ற வகையில் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைசார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம்



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பாப்பரசராக தெரிவாகலாம்

குறிப்பிட்டுள்ளது.

யுஎஸ் டுடேயும் மல்கம் ரஞ்சித்தின் பெயரை குறிப்பிட்டுள்ளது. யுஎஸ் டுடே கர்தினால் மட்டே சுப்பி, ஜேர்ஹாட் முல்லர், ரொபேர்ட் சரா, ரேய்மண்ட் பேர்க் ஆகியோரின் பெயரையும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச கத்தோலிக்க செய்தி ஊடகங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ள டைம்ஸ் ஒவ் இந்தியா மல்கம் ரஞ்சித் பெரிதும் அறியப்படாத ஆனால் எதிர்பாராத விதமாக வெற்றிபெறக்கூடிய பாப்பரசராக கூடிய ஒருவர் என தெரிவித்துள்ளது.

மல்கம் ரஞ்சித்தின் பாரம்பரிய நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டியுள்ள வொசிங்டன் டைம்ஸ் இலத்தீன் வழிபாட்டு முறை மற்றும் ஒருபாலின திருமணத்திற்கான எதிர்ப்பு ஆகியவற்றின் காரணமாக புதிய பாப்பரசரை தெரிவு செய்யவுள்ள கர்தினால்கள் மத்தியில் காணப்படும் பழமைவாத குரல் மல்கம் ரஞ்சித் என தெரிவித்துள்ளது.

அடுத்த பாப்பரசராக தெரிவு செய்யப்படக்கூடியவர் என எவரின் பெயரும் இன்னமும் குறிப்பிடப்படாத நிலையில், பல ஊடகங்களில் மல்கம் ரஞ்சித்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை கத்தோலிக்க திருச்சபைக்குள் அவருக்குள்ள மதிப்பினையும் அங்கீகாரத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஐரோப்பியர் அல்லாத ஒருவர் தலைமை பொறுப்பை ஏற்கவேண்டும் என்ற அபிப்பிராயம் அதிகரித்துள்ள நிலையில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் பெயர் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## “கொழும்பு இலங்கையின் இதயம்”



மிகவும் செல்வந்தர்கள் முதல் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவர்கள் வரை பலதரப்பட்ட மக்கள் வாழும் ஒரு நகரமாகும். அதனால் இங்கு தேவைகள் அதிகம். கொழும்பு என்பது இலங்கையின் இதயம்.

ஆனால், இன்றும் கூட கொழும்பு நகரில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அதேபோல், கொழும்பு மாநகர சபைக்கு ஆண்டுதோறும் அதிக வருமானம் கிடைக்கிறது. நீங்கள் செலுத்தும் வரிப் பணத்திற்கு என்ன நடக்கின்றது என்று நீங்கள் சிந்திக்க முடியும்.

அதனால்தான் கொழும்பு மாநகர சபை ஊழல் இல்லாத ஒரு குழுவின் கைகளில் ஏன் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம். "தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள குழு அத்தகைய ஒரு குழு என்று நான் நம்பிக்கையுடன் சொல்ல முடியும்," என்று பிரதமர் கூறினார்.

இந்த மக்கள் சந்திப்பில் கொழும்பு மேயர் வேட்பாளர் வ்ராய் கெலீ பல்தாசர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் உட்பட பல பிரதேசவாசிகள் கலந்து கொண்டனர்.

## அர்ச்சுனாவுக்கு அழைப்பாணை

சந்தேக நபரான பாராளுமன்ற உறுப்பினர், 2021மார்ச் 22, அன்று பேஸ்லைன் வீதியில் ஒரு கார் விபத்தை ஏற்படுத்தி, வாகனத்தில் இருந்தவருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்தியதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தாக்கல் செய்த புகாரில், சந்தேக நபரை சாட்சியமளிக்க ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜரானார், மேலும் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் லசந்த அபேவர்தன நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) சாட்சியமளித்தார்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய குழு

சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## 241 முறைப்பாடுகள் பதிவு

தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 54 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 23 வேட்பாளர்களும் 86 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 19 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## கெஹலியவுக்கு எதிராக ட்ரயல்- அட்- பார்

பிரதமர நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசிகளை வாங்கும் போது சுகாதார அமைச்சின் நிதியை தவறாகப் பயன்படுத்தியதற்காக சட்டமா அதிபர், ரம்புக்வெல்ல மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வார் என்று வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சீன தூதுக் குழு சபாநாயகரைச் சந்தித்தது




இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்ரமரத்ன, மக்களின் அபிலாஷைகளை நிலைநிறுத்துவதில், குறிப்பாக ஊழல் எதிர்ப்பு, நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்தை மேம்படுத்துவதில் சட்டமியற்றும் அமைப்பாக இலங்கை பாராளுமன்றம் அர்ப்பணித்துள்ளதாக சுட்டிக்காட்டினார். இதன் ஒரு குறிப்பிடத்தக்கப் படியாக, நாட்டின் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்ட மூலத்தை இலங்கை பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றியதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைப் பாராட்டிய சபாநாயகர், பல ஆண்டுகளாக சீனா வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

இது இலங்கைக்கான தனது முதல் விஜயம் எனக் குறிப்பிட்ட ஜாங் குவான், இலங்கை மக்கள் அளித்த அன்பான விருந்தோம்பலுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். கொழும்பு துறைமுக நகரத்திற்குத் தான் விஜயம் செய்ததாகத் தெரிவித்த அவர் இது இரு நாடுகளுக்கும் நீண்டகால மூலோபாய பெறுமதியைக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தித் திட்டமாகும் எனச் சுட்டிக்காட்டினார். அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையே, குறிப்பாக ஷாங்காயுடன் விஞ்ஞானம், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், இத்துறைகளில் இருதரப்பு ஈடுபாட்டை மேலும் மேம்படுத்துவதில் இரு தரப்பினரும் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

## ஸ்ரீ தலதா வழிபாட்டு பக்தர்களிடம் வேண்டுகோள்



சமூகத்தை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் நோக்கத்துடன் அரசாங்கத்தின் பிரதான திட்டமாக ‘கிளீன் ஸ்ரீ லங்கா’ திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

குப்பைகூழங்கள் அற்ற சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும், குப்பைகளை முறையாக அகற்றும் நல்ல பழக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இந்த திட்டத்தின் கீழ் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ தலதா மாளிகை கண்காட்சியுடன் இணைந்து, ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தை மையமாகக் கொண்டு "கிளீன் ஸ்ரீ லங்கா" திட்டத்தின் கீழ் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



## மஹிந்தவை சந்தித்தார் சந்தோஷ் ஜா

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கொழும்பில் உள்ள விஜேராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் மரியாதை நிமித்தமாக, செவ்வாய்க்கிழமை (22) மாலை சந்தித்தார்.

## “ஜனாதிபதி SMS அனுப்பாததால் ரூ.98 மில்லியன் சேமிப்பு”

இலங்கை ஜனாதிபதியின் வருடாந்திர சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு குறுஞ்செய்தியை அரசாங்கம் அனுப்பாததன் மூலம் 98 மில்லியன் ரூபாவை மீதப்படுத்தியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி கூறுகிறார்.

அரசியல் பேரணியில் உரையாற்றிய கொட்டஹச்சி, இந்த ஆண்டு ஜனாதிபதியின் புத்தாண்டு செய்தி அனுப்பப்படவில்லை என்றும், இது முந்தைய ஆட்சிகள் பின்பற்றிய ஒரு நடைமுறை என்றும் கூறினார்.

“இந்த ஆண்டு ஜனாதிபதியின் செய்தி அனுப்பப்படாததால் நாடு அல்லது கட்சி உறுப்பினர்கள் எந்தப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை. இருப்பினும், இந்த நடவடிக்கையால் ஒரு பெரிய தொகை சேமிக்கப்பட்டது. கடந்த ஆண்டு மட்டும், இந்த செய்திக்காக ரூ. 98 மில்லியன் செலவிடப்பட்டது,” என்று அவர் கூறினார்.

பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கே வாழ்த்து தெரிவிக்கும் குறுஞ்செய்தியை அரசாங்கம் ரத்து செய்துள்ளது என்றும், இந்த நடைமுறையை முடிவுக்குக் கொண்டுவருவது மட்டுமே வெற்றி என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கொட்டஹச்சி கூறினார்.

புத்தாண்டு செய்திகளை அனுப்புவதற்காக ஒரு ஜனாதிபதி நியமிக்கப்படுவதில்லை என்று கூறிய அவர், சாதாரண குடிமகனின் முன்னேற்றத்திற்காக பணத்தை ஒதுக்குவதை நிரூபித்துள்ளதால், நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்ல சரியான தலைவர் இப்போது நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறினார்.

# பிள்ளையானுக்கு பல குற்றங்களுடன் தொடர்பு?

பிள்ளையானுக்கு எதிரான மேலும் பல குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டில் மாத்திரம் பிள்ளையானுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

**“சிறையிலிருந்த பிள்ளையான் இதில் தொடர்புபடவில்லை என மறுக்க முடியாது. கடந்த காலங்களில் பலர் சிறையிலிருந்து குற்றங்களை வழிநடத்திய வரலாறுகள் உள்ளன**

தற்போது அவர் மீதான மேலும் பல குற்றச்சாட்டுகள் தொடர்பான சாட்சியங்கள் கிடைத்துவருகின்ற நிலையில் அது குறித்தும் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

பிள்ளையானிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் பல சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாவதுடன், அவற்றில் சில சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும்.

சில குற்றச்சாட்டுகள் உயர்நீதிமன்றில் விசாரிக்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவையாகும். அவை தொடர்பில் விசாரிக்கப்படுகிறது. அதன்பிரகாரம் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**“பிள்ளையான் இதன் பின்னணியில் உள்ளாரா? என்பது குறித்து விசாரணைகளில் தெரியவரும் எனவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்**


சில கொலை வழக்குகளில் அவர்கள் எந்தவிதத்தில் தொடர்பை கொண்டிருந்தார்கள் என காவல்துறை விசாரித்துவருகிறது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு அப்பாலான திகதிகளில் இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் கப்பம் கோரல்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிறையிலிருந்த பிள்ளையான் இதில் தொடர்புபடவில்லை என மறுக்க முடியாது. கடந்த காலங்களில் பலர் சிறையிலிருந்து குற்றங்களை வழிநடத்திய வரலாறுகள் உள்ளன.

எனவே, பிள்ளையான் இதன் பின்னணியில் உள்ளாரா? என்பது குறித்து விசாரணைகளில் தெரியவரும் எனவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.





# 300 அடி பள்ளத்தில் கவிழ்ந்த கார்

ரஞ்சித்ராஜபக்ஷ

மஸ்கெலியா - நல்லதன்னி பிரதேசத்தில் இருந்து கினிகத்ஹேன, பொல்பிட்டிய நோக்கி பயணித்த கார் ஒன்று, செவ்வாய்க்கிழமை (22) காலை வீதியை விட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் கவிழ்ந்து கெசல்கமுவ ஓயாவில் விழுந்துள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரின் ஓட்டுநர் காயமடைந்து லக்ஷபான பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரில் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, குறித்த கார் விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் கார் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கொங்ரீட் கலவை இயந்திர வண்டிகள் விபத்து

நீலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெரோ கீழ் பிரிவில் கொங்ரீட் கலவை இயந்திரம் வண்டி, செவ்வாய்க்கிழமை (22) அன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹெரோ கீழ் பிரிவில் கட்டப்படும் கட்டிடம் ஒன்றுக்கு சென்ற கொங்ரீட் கலவை இயந்திர வண்டி பாதையை விட்டு விலகி குடைசாய்ந்து, பின் பக்கம் வந்த மற்றொரு கொங்ரீட் கலவை இயந்திர வண்டியின் மீது விழுந்துள்ளது.

விபத்தின்போது, வண்டியில் பயணித்த வாகன சாரதி கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாதோடு, மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 5,000 பொலிஸ் அதிகாரிகளை பணியமர்த்த நடவடிக்கை

இந்த ஆண்டு (2025) இலங்கை பொலிஸ் சேவையில் 5,000 அதிகாரிகளை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2,000 அதிகாரிகளை மிக விரைவாக பணியமர்த்த திட்டமிடப்பட்டு ள்ளதாகவும், மீதமுள்ள 3,000 பேர் டிசெம்பரில் பணியமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளிடையே திங்கட்கிழமை (21) இடம்பெற்ற இணையவழி கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஒழுங்கமைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பொலிஸ் அதிகாரிகளின் சேவையை மிகவும் திறமையாகவும், திறம்படவும் பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை பொலிஸ் சேவைக்கு தனி சம்பள அமைப்பை தயாரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



# "சஹ்ரானின் மறு தோற்றம் சூப்பர் முஸ்லிம் அமைப்பாக உருவாக்கம்"

கனகராசா சரவணன்

இலங்கையில் சஹ்ரானின் மத பயங்கரவாதம் இப்போது சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பாக உருவாகியுள்ளதுடன் கிழக்கில் மத ரீதியான குட்டி பாகிஸ்தான் போல உருவாக்க பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா முயற்சிக்கின்றாரா? இந்த மாகாணம் மூவின மக்களும் வாழுகின்ற சமத்துவமான ஒரு மாகாணம் ஆகவே மத ரீதியான ஒரு மாகாணத்தைப் பிரிக்க ஒரு போதும் விடமாட்டோம் என அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் தலைவர் சிவதர்சன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல், குண்டு வெடித்த இடத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதில், கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

"இந்த பாரிய தீவிரவாத தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளதுடன், 80 மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் இது ஒரு வேதனையான விடையம் என்பதுடன் உலகளாவிய ரீதியில் ஒரு துன்பகரமானதாக இடம்பெற்றுள்ளது

உண்மையில் ஒரு வேதனையான நாட்களைக் கடந்து செல்கின்றோம் இந்த பயங்கரவாத தற்கொலை குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளாக செயற்பட்டவர்கள் இந்த இடத்தில் வர்ணிக்கப்பட்டு இரத்த ஆறுகளாக ஓடுகின்ற போது அதைப் பார்த்து ரசிக்கக் கூடிய ஒரு தீவிரவாத செயலாகக் கருதுகின்றோம்.

இதனை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை கண்ணீரோடு இதை ஒவ்வொரு நிமிடங்களும் கடந்து செல்கின்றோம். வருடத்தில் ஒரு முறை இந்த நினைவேந்தலை செய்தாலும் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் வேதனையுடன் கண்ணீருடன் நாட்களைக் கடந்து செல்கின்றனர்.

சொந்த பிள்ளையை கண்முன்னே மரணித்த கொடூரமான செயற்பாட்டைக் காணக்கூடியதாக இருந்தது எனவே இவ்வாறான ஒரு மத தீவிரவாதம் திட்டமிட்டுச் செய்ததை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த உயிர்த்த ஞாயிறு படுகொலை தொடர்பான சூத்திரதாரிகள் யார் என, ஜனாதிபதி 21ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக கூறிய வார்த்தைகளை நம்புகின்றோம். ஆனால், இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலையின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் என்பவன் மரணத்திற்கு முன்னர் கூறிய விடயம், அல்லாவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஹாபீர்கள் அவர்கள் கொல்லப்பட வேண்டும். நாங்கள் மரணித்தாலும் இதைப் பார்க்கின்ற ஒவ்வொரு முஸ்லிம்களும் ஹாபீர்களை கொலை செய்ய வேண்டும். என இந்த விடையம் தவறானது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதேவேளை, அந்த சஹ்ரானின் கடும் போக்குவாத சிந்தனையுடன் தற்போது சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பு உருவாகியுள்ளது. எனவே இந்த ஐ.எஸ்.ஐ.எஸ் குண்டு வெடிப்புக்கு பின்னர் நாங்கள் தொடர்ந்து ஒரு அச்சமான சூழலில் இருக்கிறோம் மீண்டும் நாங்கள் மரணிப்பதற்கு தயார் இல்லை. எனவே இந்த மத பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்க பாதுகாப்புப் படை செயல்பட வேண்டும்.

எங்கேயோ ஒரு நாட்டில் யாரோ ஒருவர் இஸ்லாமியச் சமூகத்தைச் சுட்டுக் கொன்றார் என்பதற்காக இலங்கை நாட்டில் அப்பாவி குழந்தைகளையும் மக்களையும் கொலை செய்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா இது முஸ்லிம்களின் தாயகம் என்கிறார். கிழக்கில் மதரீதியான ஒரு தாயத்தை உண்டாக முயற்சிக்கின்றாரா ? குட்டி பாகிஸ்தான் போல உருவாக்க நினைக்கின்றாரா? அதைக் கடைசி வரைக்கும் விடமாட்டோம். இந்த மாகாணத்தில் மூவின மக்களும் வாழுகின்ற சமத்துவமான ஒரு மாகாணம் எனவே மதரீதியாக மாகாணத்தைப் பிரிக்க முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, பாதிக்கப்பட்ட சமூகம் என்ற ரீதியில் மனவேதனையுடன் சொல்லுகின்றோம் நாங்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டுள்ளோம். இது மன்னிக்க முடியாத விடையம் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் கொடு என இயேசுநாதர் சொல்லியுள்ளார். ஆனால் அறைய வந்தால் கன்னத்தைக் கொடுத்திருப்போம் அவர்கள் குண்டுடன் கொல்ல வந்தார்கள் என தெரியாது எனவே மீண்டும் எமது சந்ததியை அழிக்கத் தயார் இல்லை.

ஆகவே, ஜனாதிபதி தேர்தலின் போது கூறியதை நிறைவேற்ற வேண்டும் உண்மையான சூத்திரதாரி யார் என கைது செய்து தீர்வை பெற்றுத் தர வேண்டும் இதனை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம். " என்றார்.

# குளத்திற்குள் விழுந்து குடும்பஸ்தர் பலி

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் பகுதியில் உள்ள விலுக குளத்தில் செவ்வாய்க்கிழமை (21) அன்று மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், தவறுதலாக குளத்திற்குள் விழுந்து உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - மன்னார் வீதியின், நான்காம் கட்டை விலுக பகுதியைச் சேர்ந்த எச்.ஹஸீம் அஹ்மட் (வயது36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று குறித்த நபர் தனது நண்பருடன் இணைந்து புத்தளம் - விலுக குளத்தில் மீன் பிடிப்பதற்காகச் சென்றுள்ளார். குளத்தில் வழமைக்கு மாறாக நீர் அதிகரித்தும் குளம் முழுவதும் தாமரைப் பூக்களாகவும் காணப்பட்ட நிலையில் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த அவர், திடீரென குளத்திற்குள் விழுந்து காணாமல் போயுள்ளார்.



பின்னர் அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை மீட்டு புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்துள்ள போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர், குறித்த குளத்தில் சுமார் 20 அடி ஆழமுள்ள நீருக்குள் விழுந்துள்ளார் என தெரிவிக்கப் படுகிறது. சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கும், புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் வழங்கப்பட்ட தகவலுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

உயிரிழந்தவரின் ஜனாஸா பிரேத பரிசோதனையின் பின்னர் வீட்டாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மூளைக் காய்ச்சலால்

# இளம் பெண் உயிரிழப்பு




யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சலால் இளம் பெண் உயிரிழந்துள்ளார். பளைவீமன்காமம், தெல்லிப்பளையைச் சேர்ந்த கவிந்தன் சாமினி (வயது23) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புது வருடத்தன்று காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை (19) மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று திங்கள் கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# தேர்தல்கள் ஆணைக்குழு மீது ஜீவன் குற்றச்சாட்டு

எஸ்.சதீஷ்

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாகவும், ஜனநாயக ரீதியாகவும் இயங்க வேண்டிய ஒரு அமைப்பாகும். இருந்தும் தேர்தல் ஆணைக்குழுவின் பக்கச்சார்பான இவ்வாறான செயற்பாடுகள் வருத்தத்திற்குரியது என பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் திங்கட்கிழமை(21) தேர்தல் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது.

இக் கூடத்தில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் இவ்வாறான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதில் எந்த நன்மையும் இல்லையெனக் குறிப்பிட்டதுடன், வேட்புமனு தாக்கல் செய்தபோது சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அச்சபைகளை நீதிமன்றத்தின் மூலம் மீளப் பெற்றுள்ளோம். சில சபைகள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளோம்.

அத்துடன், மஸ்கெலியா உள்ளூராட்சி மன்ற சபை ஏன் நிராகரிக்கப்பட்டது. என்று தேர்தல் ஆணையாளரிடம் வினவியபோதும், அங்கீகரிக்கப்பட்ட நபர் வேட்பு மனு தாக்கல் செய்யாமல் வேறு நபர் தாக்கல் செய்யப்பட்டமையினால் நிராகரிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக எங்களுடைய கட்சியிலே வேட்புமனு அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு சுகயீனம் கரணமாக அவரின் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்து அவருக்குப் பதிலாக நியமித்திருந்த மாற்று நபருக்குச் சமாதான நீதவானின் சான்றிதழ் வழங்கியிருந்தும் எங்களுடைய கட்சியின் மஸ்கெலியா பிரதேச



சபையின் வேட்புமனுவினை நிராகரித்து இருந்தனர். இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளரிடம் வினவியபோது அவர் அதற்கு எவ்வித பதிலும் வழங்கவில்லை.

மேலும், ஜனாதிபதி அனுரகுமார திசாநயக்க அவர்கள் தேர்தல் பிரசாரங்களின் போது உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வெற்றிபெறும் எங்களுடைய (தே.ம.ச) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கே நிதி ஒதுக்கீடு மேற்கொள்வேன் என்றும் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக யோசிப்போம் என்றும் கூறிவருகின்றார்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதேவேளை ஜனாதிபதி அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பிலும் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். அத்தோடு நாட்டின் ஜனாதிபதி என்பதை மறந்து எதிர்க்கட்சி தலைவர் என்று நினைத்துத் தேர்தல் மேடைகளில் பேசிவருகின்றார்.

மேலும், கண்டி தலதா மாளிகையில் பௌத்த மதம் சார்ந்து நடைபெறும் சமய வழிபாட்டைத் தாம் வரவேற்பதாகவும், எனினும் குறித்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்ட விடயம் வருத்தமளிப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

தேர்தலை முன்னிட்டு கல்வி ரீதியிலான செயற்பாடுகள், பொருளாதார ரீதியான செயற்பாடுகள், காணி உரிமை தொடர்பிலான செயற்பாடுகள் ஆகியவற்றைத் தடைசெய்யும் தேர்தல்கள் ஆணைக்குழு சமய செயற்பாடுகளுக்கு மட்டும் தடை விதிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

# வாசிப்பு பழக்கத்தின் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்

‘உடலுக்கு உடற்பயிற்சி போலவே வாசிப்பு என்பது நம் மனதிற்கும் அறிவுக்குமான பயிற்சியாகும்’ என்று ரிச்சர்ட் ஸ்டீல் கூறியுள்ளார். எனினும், புதிய நூல்களை வாங்கும் பழக்கமும், நூலகங்களில் நூல்களை எடுத்து வாசிக்கும் பழக்கமும் குறைந்து வருகின்றன.

பெற்றோர்கள், வீட்டில் புத்தகங்களை எடுத்துப் படிக்கும் பழக்கம் இல்லாததால், பிள்ளைகளும் அப்படியே அமைந்து விடுகின்றனர். இணையவழித் தோற்றங்களும் வாசிப்புப் பழக்கத்தை வற்றச் செய்துவிட்டன. எனினும், மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக யுனெஸ்கோ சார்பில் உலக புத்தக தினம் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 23 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது

தொழில்நுட்பத்துடன் அதிகரித்து வரும் ஒருங்கிணைப்பு, பண்டைய காலங்களிலிருந்து சமூகத்தில் நிலவும் மதிப்பு அமைப்புகளை எவ்வாறு சேதப்படுத்துகிறது என்பதை நாம் காணலாம். மேலும், பரபரப்பான சமூக மற்றும் பொருளாதார முறைகள் நவீன மனிதனை வாசிப்பிலிருந்து விலக்கிக் கொள்ள வழிவகுத்துள்ளன.

கொரோனா தொற்றுநோயை எதிர்கொள்வதில், நிகழ்நிலை (ஒன்லைன்) கல்வி முறையின் சமூக மயமாக்கல் மற்றும் சமூக ஊடகங்கள் சமூகத்திற்கு அருகாமையில் அதிகரித்து வருவது போன்ற காரணிகளால் இன்றைய சமூகம் வாசிப்பிலிருந்து எவ்வாறு விலகிச் சென்றுள்ளது என்பதைக் காண முடிகிறது.

சமூகத்திலிருந்து வாசிக்கும் பழக்கம் இழப்பு அந்த சமூக கலாச்சாரத்தின் வீழ்ச்சிக்குப் பங்களிக்கும் ஒரு காரணியாகும். “ஒரு கலாச்சாரத்தை அழிக்கப் புத்தகங்களை எரிக்க வேண்டியதில்லை” என்று ரே பிராட்பரி கூறினார். “மக்கள் அவற்றைப் படிப்பதை நிறுத்தட்டும்.” மேலே குறிப்பிட்டது போல, புத்தகங்களைப் படிப்பதிலிருந்து விலகி இருப்பது சமூக வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாகும்

வாசிப்பு நல்ல சமூக உறவுகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உதவுகிறது. வாசிப்பு மன அழுத்தத்தைக் குறைத்து, மனக் கவனத்தை வளர்க்க உதவுகிறது. சுமார் முப்பது நிமிடங்கள் வாசிப்பது இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு மற்றும் மனச்சோர்வு உணர்வுகளைக் குறைப்பதாக அறிவியல் ஆய்வுகள் காட்டுகின்றன. வாசிப்பு மன அழுத்தத்தைக் குறைத்து நல்ல மன ஆரோக்கியத்தை வளர்க்கும்.

வாசிப்புக்குப் பழகி, வாசிப்பிலிருந்து பெற்ற அனுபவங்களைத் தொடர்ந்து குவித்துக்கொண்டிருப்பவர்கள், வாழ்க்கையில் எழும் பிரச்சினைகளை நோக்கி உணர்ச்சிவசப்படாமல், பல சந்தர்ப்பங்களில், தாங்கள் பெற்ற அனுபவங்கள் மூலம் வாழ்க்கையை நடைமுறையில் எதிர்கொள்ளும் பழக்கத்தைப் பெறுகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட வாசிப்புப் பழக்கத்தை, புதிய அணுகுமுறையுடன் சமூக மயமாக்க வேண்டிய வலுவான சமூகத் தேவை உள்ளது. வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் அது தரும் உடல் மற்றும் மன நலம் குறித்து சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாகச் சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

ஹட்டன்-பொன்நகர் வீதி பல வருடங்களாக மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால், அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதி சேதமடைந்துள்ளமை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் இது தொடர்பில் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுத்து வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– சுதத் எச்.எம்.ஹேவா



# மக்கள் விடுதலை முன்னணியும் இந்திய விஸ்தரிப்பு வாதமும்



எம்எஸ்.எம்.ஐயூப்

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களின், குறிப்பாக பாதுகாப்பு ஒப்பந்தத்தின் விவரங்களை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் இன்னமும் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன.

இந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தைப் பலர் வியப்புடனேயே பார்க்கின்றனர். ஏனெனில், ஆளும் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டு கிளர்ச்சிகளின் போதும் அக்கட்சி கடுமையான இந்திய எதிர்ப்பை வெளியிட்டு வந்தது.

இந்தியாவுடனான உறவு விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணியை விமர்சிக்கும் பலர் இந்திய விஸ்தரிப்பு வாதம் ஒன்று இருப்பதாகவும் அது இலங்கையின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்றும் 1960களில் இருந்தே கூறி வந்த மக்கள் விடுதலை முன்னணி தற்போது இந்தியப் பிரதமரை கட்டித் தழுவி இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டுள்ளது என்று கூறுகின்றனர்.

பல விடயங்களில் கொள்கை ரீதியாக மக்கள் விடுதலை முன்னணி குத்துக் கரணம் அடித்துள்ளமை உண்மை தான். அவர்களது சில கொள்கை மாற்றங்கள் நியாயமானதாகவும் தெரிகிறது. மேலும், சில மாற்றங்கள் எந்தவித அடிப்படையும் இல்லாத சந்தர்ப்பவாதமாகவும் தெரிகிறது. ஆனால், இந்தியா தொடர்பான அவர்களது நிலைப்பாட்டு மாற்றத்தைப் பற்றிய விமர்சனம் சரியானது அல்ல என்றே தெரிகிறது.

மக்கள் விடுதலை முன்னணி ஒரு காலத்தில், அதாவது 1971இல் இடம்பெற்ற அவர்களது முதலாவது கிளர்ச்சிக்கு முன்னர் இந்திய விஸ்தரிப்பு வாதத்தைப் பற்றிக் கருத்து வெளியிட்டு வந்தமை உண்மை தான். எனினும், அக்கிளர்ச்சி தோல்வியடைந்த ஒரு வருடத்தில் அவர்கள் அவ்வெண்ணைக்கருவைக் கைவிட்டனர். ஆனால், அது இடம்பெற்று 53 ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும், அரசியல் விமர்சகர்கள் என்று கூறிக்கொள்வோருக்கு இன்னமும் அது தெரியாமல் இருக்கிறது.

முறையான கல்வித் திட்டமொன்றின் ஊடாக தமது கட்சியில் புதிதாக சேருவோரை அறிவூட்ட நடவடிக்கை எடுத்த இலங்கையின் முதலாவது அரசியல் கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகத் தான் இருக்க வேண்டும். 1967ஆம் ஆண்டு முதல் அக்கட்சி தமது புதிய உறுப்பினர்களுக்கான கல்வி திட்டத்தை வகுத்தது.

அக்கட்சி மாக்ஸியக் கட்சியாக இருந்த போதிலும், மாக்ஸியத் தத்துவம், மாக்ஸிய பொருளாதாரம் போன்ற சிக்கலான விடயங்களை ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொடுக்காமல் நாட்டின் நடைமுறை அரசியல், பொருளாதாரம் மற்றும் அரசியல் வரலாறு போன்றவற்றையே அதன் தலைவர்கள் தமது புதிய உறுப்பினர்களுக்குப் போதித்தனர். அவை ஐந்து கலந்துரையாடல்கள் மூலமாகப் போதிக்கப்பட்டன. அக்கலந்துரையாடல்கள் வகுப்புக்கள் என்றே அழைக்கப்பட்டன.

1.முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி, 2.சுதந்திரமானது நவ காலனித்துவ தந்திரமாகும், 3.இந்திய விஸ்தரிப்பு வாதம், 4.இலங்கையின் இடதுசாரி இயக்கம் மற்றும் 5.இலங்கை புரட்சி மேற்கொள்ளப்பட வேண்டிய பாதை ஆகியன 1967இல் தயாரிக்கப்பட்ட அவ்வைந்து வகுப்புக்களின் பெயர்களாகும்.

1971 கிளர்ச்சி தோல்வியடைந்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட போது சிறைக்கூடங்களை அவர்கள் கல்வி நிறுவனங்களாக மாற்றிக்கொண்டனர். சிலர் அரசாங்கத்தின் கல்வி திட்டத்தின் படி கற்க ஆரம்பித்தனர். அதேவேளை, கட்சியின் தலைவர்கள் அரசியல் ஆய்வுகளை நடத்தி தமது வகுப்புக்களை மீளாய்வு செய்தனர்.

இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற வகுப்பின் மூலம் இனவாதத்துக்குத் தீனிபோடப்படுகிறது என்ற விமர்சனம் அப்போது எழுந்தது. குறிப்பாக, இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

உண்மையிலேயே இந்திய விஸ்தரிப்பு வாதம் எனும் எண்ணக்கருவானது மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கியதொன்றல்ல. அது சீனத் தலைவர்கள் உருவாக்கிய எண்ணக்கருவாகும். அக்காலத்தில் சீனாவுக்கும் சோவியத் ஒன்றித்துக்கும் இடையே சித்தாந்தப் போர் நடைபெற்று வந்தது. அதேபோல, இந்தியா சோவியத் ஒன்றித்தின் நட்பு நாடாகவும் சீனாவின் எதிரியாகவும் இருந்தது. இந்நிலையில், இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சீன சார்பு அமைப்புக்களும் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற எண்ணக்கருவை ஏற்றுக்கொண்டன.

கிளர்ச்சியின் பின்னர் சிறைக்கூடங்களில் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடல்களின் பயனாக மக்கள் விடுதலை முன்னணி சீன சார்பு கொள்கையை கைவிட்டது. அத்துடன், அக்கட்சி 53 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1972இல் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற எண்ணக்கருவைக் கைவிட்டது. ஆனால், மக்கள் விடுதலை முன்னணியை விமர்சிப்போர் இன்னமும் அதைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

சிறைகூட கலந்துரையாடல்களின் விளைவாக மக்கள் விடுதலை முன்னணி தமது ஏனைய வகுப்புக்களையும் மாற்றிக்கொண்டது. அதன் படி 1972இற்கு பின்னர் கீழ் காணப்படும் தலைப்புகளிலேயே வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

1.பொருளாதார நெருக்கடி, 2.மென்செவிக் இயக்கம் (இடதுசாரிகளைப் பற்றிய வகுப்பு), 3. இலங்கை புரட்சியின் வகிபாகம், 4.சோஷலிஸத்துக்கான வழி (இலங்கைப் புரட்சி மேற்கொள்ளப்பட வேண்டிய பாதை என்ற வகுப்பின் புதிய தோற்றம்) மற்றும் 5.பொல்செவிக் கட்சியைக் கட்டியெழுப்புதல் (அரசியல் ஒழுக்கம் உள்ள கட்சியொன்றை எவ்வாறு கட்டியெழுப்புவது) என்பனவே அக்கட்சியின் ஐந்து வகுப்புக்களாக நடத்தப்பட்டன.

அதன் பின்னர், ஒருபோதும் மக்கள் விடுதலை முன்னணி இந்திய விஸ்தரிபபுவாதம் என்ற கருத்தை முன்வைக்கவே இல்லை. தொடர்ச்சியாக இந்தியாவை எதிர்க்கவும் இல்லை. சில காலங்களில் இலங்கையில் ஏனைய கட்சிகள் இந்தியாவை எதிர்த்து செயற்படும் போது, அக்கட்சி இந்தியாவுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டும் வந்துள்ளது.

1977இல் ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி பதவிக்கு வந்தது. வெளிநாட்டு செலாவணி மோசடியில் ஈடுபட்ட ஜயவர்தனவின் நண்பர்கள் சிலர், குற்றவியல் நீதி ஆணைக்குழு சட்டத்தின் கீழ், சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர். எனவே, ஜயவர்தன அச்சட்டத்தை இரத்து செய்து தமது நண்பர்களை விடுவித்தார். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களும் இதே சட்டத்தின் கீழேயே சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். சட்டம் இரத்து செய்யப்பட்ட உடன் அவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

தமக்கு முன்னர் பதவியில் இருந்த சிறிமா பண்டாரநாயக்கவைப் போலன்றி, ஜயவர்தன அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் நண்பரானார். இந்தியா சோவியத் ஒன்றியத்தின் நண்பராக இருந்தது. இந்தியாவுக்கு இரு புறத்திலும் இருக்கும் பாகிஸ்தானும் வங்காளதேசமும் அமெரிக்க சார்பு நாடுகளாக இருந்தன. இலங்கையும் அமெரிக்க சார்பு நாடாக மாறியதன் விளைவாக இந்தியா சீற்றம் கொண்டது.

இதனிடையே 1983இல் தமிழர்களுக்கு எதிராக பாரியளவில் வன்செயல்கள் வெடித்தன. அதற்கு ஐ.தே.கவே காரணமாக இருந்தது. அக்கட்சிக்காரர்களே வன்செயல்களில் முன்னணியில் இருந்தனர். எனினும், இக்கலவரத்துக்குக் காரணமானவர்கள் எனக் கூறி, ஜயவர்தனவின் அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் நவ சமசமாஜக் கட்சியையும் 1983இல் ஜூலை 31ஆம் திகதி தடை செய்தது.

எனினும், அக்கட்சிகள் கலவரத்துக்குக் காரணமாக இருக்கவில்லை என்று அவ்வரசாங்கத்தின் அமைச்சராக இருந்த ரணில் விக்ரமசிங்க 1995ஆம் ஆண்டு பட்டலந்த ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

தமது கட்சி தடை செய்யப்பட்டதையடுத்து, ரோஹண விஜேவீர உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் தலைமறைவானார்கள். தலைமறைவாக இருக்கும் நிலையிலேயே ஜயவர்தனவின் வெளிநாட்டுக் கொள்கையை விமர்சித்து விஜேவீர அறிக்கையொன்றை வெளியிட்டார். ஜயவர்தனவும் அமெரிக்க சார்பு கொள்கையை பின்பற்ற ஆரம்பித்ததன் காரணமாக இந்தியா மூன்று பக்கங்களால் அமெரிக்க சார்பு நாடுகளால் முற்றுகையிடப்பட்டுள்ளதாகவும் இது இலங்கைக்கு பாதகமாகவே அமையும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டு இருந்தார். விரைவிலேயே அவரது கூற்று உண்மையாகியது.

தமக்கு எதிரான மக்கள் விடுதலை முன்னணியைத் தடை செய்வதற்கு ஜயவர்தன தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களைப் பாவித்ததைப் போலவே தமக்குப் பாதகமான வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடித்த ஜயவர்தனவை மட்டுப்படுத்த இந்தியாவும் அதே கலவரத்தைப் பாவித்தது. கலவரத்தின் காரணமாக இந்தியாவுக்குள் தமிழ் அகதிகள் வருவதை சுட்டிக்காட்டி இந்தியா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட்டு இறுதியில் பிராந்தியத்தில் தமது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திட ஜயவர்தனவை நிர்ப்பந்தித்தது.

அப்போது, மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் இந்தியாவுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தது. எனவே, பொதுவாக மக்கள் விடுதலை முன்னணி இந்திய எதிர்ப்பு அமைப்பொன்றல்ல. சூழ்நிலைகளின் அடிப்படையிலேயே அக்கட்சியின் இந்தியா தொடர்பான கொள்கை அமைந்திருக்கிறது.

இப்போது மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடன் பாதுகாப்பு உட்பட ஏழு விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது. அவற்றின் விவரங்களை வெளியிட அது மறுத்து வருகிறது. தேவையானவர்கள் அந்த விவரங்களைத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்று வெளிநாட்டமைச்சர் விஜித்த ஹேரத் கூறியிருந்தார்.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அந்த விரங்களை வழங்க முடியுமாக இருந்தால் அதனை தமது அமைச்சின் இணையத்தளத்தின் மூலமாக ஏன் அவற்றை வெளியிட அவரால் முடியாது என்ற கேள்வி எழுகிறது.

பாடசாலை மாணவர்களை

# சனநாயக சமூகவியலில் தயார்ப்படுத்தல்



அ.அனுஷ்திக்கா,
இறுதி வருட கல்வியியல்
சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஆதிக்கப் போக்குகளால் கட்டவிழ்க்கப்படும் வன்முறைகளைத் துடைத்தெறிந்து, வளமான எதிர்காலத்தை இன்று நாம் உருவாக்க வேண்டுமாயின், மாணவர்களின் மனங்களில் சனநாயகத்தின் அடித்தளத்தை இட வேண்டும். அதுவே சீரான சமூகவியலைத் தோற்றுவிக்கும். தற்காலத்தில் தனக்காக ஓடிக்கொண்டிருக்கும் சில மனிதர்களையும், நமக்காக என்ற சிந்தனையிலும், செயலூக்கத்திலும் இயக்க தற்போதைய இலங்கை கல்வி முறையிலுள்ள மாணவர் பாராளுமன்றம் சிறந்த ஆதாரமாகும்.

2008ஆம் ஆண்டு 2008/15ஆம் இலக்கச் சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தல் கோவை மற்றும் 2016 தை மாத 22ஆம் நாள் 4/2016 சுற்று நிருபத்தோடு, 03/2019ஆம் சுற்று நிருபமும் இம்மாணவர் பாராளுமன்றத்தினை மேலும் வலுப்படுத்தின. இதன் அடிப்படை நோக்கமே பாடசாலை மாணவ மாணவியருக்கு சனநாயகத்தின் அடிப்படைகளைப் பழக்கப்படுத்துவதாகும். இன்னும் நோக்குவோமாயின், சனநாயகத்தின் பொறுப்புக்களை வகைகூறலும், சட்டவாட்சி, வாக்கு. வாக்களித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் செய்முறை அறிவைப் பெறுவதற்குரிய வழிகளைத் திறந்து, உரையாடல், இணக்கப்பாடு, ஏனையோரின் கருத்துக்களுக்கு செவிமடுத்தல் என்பதைப் பழக்கப்படுத்த வேண்டும். அத்தோடு பெரும்பாலோரின் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ளல் போன்ற திறமைகளையும் மனப்பாங்குகளையும் வழங்கி சனநாயக பெறுமதிகள் மற்றும் பெறுமானங்கள் தொடர்பான அனுபவங்களைப் பெற்று சனநாயக ஆட்சிமுறைமை என்பது வாழ்க்கை முறைமையே என்பதனை அனுபவங்களூடாகத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதுவே பாடசாலை, வலயம், மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் உருவாக்கப்படும் மாணவர் பாராளுமன்றத்தின் அடிப்படை நோக்கமாகும்.

பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமைப்பில் பல்வேறுபட்ட சனநாயகக்கூறுகள் பொதிந்துள்ளன. அதிபர், பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் நிறைவேற்றுச் சபையில் செயலாளர் நாயகமாக செயற்படுவார். அதேபோல் அபிவிருத்தி, நிர்வாகம், ஒழுக்கம் என்ற மூன்றிக்கும் தலா ஒருவர் வீதம் பிரதிச் செயலாளர் நாயகங்கள் நியமிக்கப்படுவர். சபாநாயகர், பிரதமர், சபை முதல்வர், பிரதிச் சபாநாயகர், பிரதிக் குழுக்களின் தலைவர், அமைச்சர்கள் 10 பேர், பிரதி அமைச்சர்கள் 10 பேர் மற்றும் ஆலோசனைக் குழுக்கள் பத்துமாக பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் அமைப்பு காணப்படும்.


சனநாயகத்தின் அடிப்படை அம்சங்களில் சர்வசன வாக்குரிமை மிக முதன்மையானது. காரணம் சனநாயகத்தின் பிரதிநிதித்துவ சனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பது வாக்குரிமையாகும். அதன்படி எமது மாணவர் பாராளுமன்றத்தில் மாணவர்கள் தம் விருப்பிற்கு ஏற்ப தலைவர்களைத் தேர்ந்தெடுத்து மாணவப் பிரதிநிதிகளை உருவாக்கிக் கொடுக்க முடியும். அத்துடன், தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளும் மாணவ வேட்பாளர்களைப் பற்றியும் அவர்களின் திறன் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பாக தமது சமவயதுக் குழுவினரோடு கலந்தாலோசிப்பர். இதன்போது நல்லதொரு சமூக மயமாக்கல் கட்டியெழுப்பப்படுகிறது. மேலும் பொதுவாக சனநாயக வெற்றியில் அரசியல் அறிவு படைத்த மக்கள் தேவை என்பர். தற்காலத்தில் அரசியல் பேசுவது தேவையற்ற வேலை என்று ஒதுக்கியும் ஒதுங்கியும் இருக்கின்றனர். ஆனால் பாடசாலையில் மாணவர் பாராளுமன்றத்தினால் மாணவர்கள் வெளி அரசியல் பற்றியும் அறிந்து பகிர்ந்து கொள்ளக்கூடிய சூழ்நிலையொன்று ஏற்படுகிறது.


வாக்காளர் போலவே வேட்பாளரும் சனநாயகத்தில் பெரிதும் வகிபங்கினை கொண்டவர். அதன்படி வேட்பாளர் வாக்குகளைக் கோருவதற்கு தன்னுடைய பிரசாரங்களைப் பாடசாலையில் எவ்வளவு இலாபகமாக செய்கின்றார்கள் என்பது வாக்காளர் மற்றும் வேட்பாளருக்கான நெருக்கத்தினை ஏற்படுத்தி விடும். அத்துடன், நல்ல தலைவர்களை அடையாளப்படுத்திக் கொடுக்கும். சனநாயகப் பண்புகள் தனிமனிதர்களுள் வளரும் என்பதைத் தாண்டி தனிப்பட்ட ஆளுமைகள் வளர்த்தெடுக்கப்படும். வேட்பாளர்கள் எவ்வாறு சமத்துவத்துடன் தமக்கிடையே பரஸ்பரத் தொடர்புகளைப் பேணி வெற்றியோ தோல்வியோ அதனை முழுமையாக ஏற்று, பாராட்ட வேண்டிய இடத்தில் பிறரைப் பாராட்டியும் தவறவிடப்படும் விடயங்களைத் திருத்தியும் சனநாயகத்தினைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை மாணவர்கள் இதன் மூலம் புரிந்து கொள்வர்.

பாடசாலை மாணவர் பாராளுமன்றம் கூட்டப்படும் போது தனித்த கௌரத்துடன் அது இயங்குவதையும், அதற்கான கௌரவத்தினைக் கொடுக்க எண்ணுவதையும் உணர முடியும். அங்கு நிகழ்கின்ற அமைதி, மாணவர் பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றி முடிக்கையில் எவ்வாறு பாராட்ட வேண்டும், சபாநாயகர் சபையைத் தலைமை தாங்கிக் கொண்டு செல்வது, தமக்குரிய அமைச்சும் பொறுப்புக்களை நிர்வகிப்பது இவையெல்லாம் கவனிக்கப்பட வேண்டும். இவையெல்லாம் சனநாயகத்தின் கூறுகளே ஆகும்.

அத்துடன், வாக்களிப்பு நடைமுறைகளில் மாணவர் பங்குகொண்டு செயற்படுவது, பிற்காலத்தில் செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும். வாக்கு எண்ணும் நடைமுறைகள் தேர்தல் முடிவுகளை வெளியிடுதல் என்பன அனைத்தும் மாணவர்களை யதார்த்த சனநாயக வாழ்வியலோடு இணைக்கிறது. பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் கௌரவத்திற்கு முரணாகச் செயற்படும் பிரதிநிதிகளை அவர்களின் பொறுப்பிலிருந்து விலக்கி மாற்றீட்டை முறையாகச் செய்வதெல்லாம் மாணவர் பாராளுமன்ற இறையாண்மையின் தனித்துவப் போக்கைக் காட்டி நிற்கிறது.

இவ்வாறெல்லாம் சனநாயக சமூகவியலை மிக இலகுவாக மாணவர்களுக்கு செயலூக்கத்தோடு இணைந்து வழங்குவதில் மாணவர் பாராளுமன்றம் முன்னிற்கிறது. ஆனால், அது முழுமையாக மாணவர்களுக்குக் கிடைப்பதில் சிரமங்களும் இல்லாமலில்லை. கலைத்திட்டத்தில் கட்டுப்பட்டுள்ள சில பாடசாலை இணைப்பாடவிதானங்களுக்கான தருணங்களை முழுமையாக மாணவர்களுக்கு வழங்குவதில் சற்றே பின்னிற்கின்றன. பாடசாலை மாணவப் பாராளுமன்றம் மற்றும் வலய மாணவர் பாராளுமன்றங்கள் இயங்கு நிலையில் மாணவர்களுக்கு பரீட்சயமாக காணப்பட்டாலும், மாகாண மாணவர் பாராளுமன்றம் பெரிதும் இயக்கத்தில் இல்லாமை அதனை முழுமைப்படுத்தாமல் உள்ளது. வருங்காலத்தில் பாடசாலை, வலய, மாகாண, தேசிய மாணவர் பாராளுமன்றம் என்று சனநாயகத் தன்மை தொடர் செயலொழுங்குடன் நடைபெறின் சனநாயக சமூகவியல் மேலும் மாணவர்களுக்கு நெருக்கமாகும்.






# அறிவை மேம்படுத்த வாசி

மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக யுனெஸ்கோ சார்பில் உலக புத்தக தினம் கொண்டாடப்படுகிறது. புத்தக வாசிப்பால் கிடைக்கும் அளவற்ற மகிழ்ச்சியைக் குழந்தைப் பருவத்திலேயே ஏற்படுத்தினால் எழுத்து மீதான ஆர்வம் தூண்டப்பட்டு அவர்களின் எழுத்துகளைப் பின்னாளில் பிரசுரிக்கவும் உதவும் என நம்பப்படுகிறது.

புத்தகம் வாசிப்பதன் மூலம் மனிதர்களுக்கு ஏராளமான நன்மைகள், கல்வி அறிவு, புரிதல் ,தெளிவு கிடைக்கிறது. மனிதர்களை புதிய உலகத்துக்குப் புத்தகங்கள் அழைத்துச் செல்கின்றன.

உலக புத்தக தினம் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி முதன் முதலாகக் கொண்டாடப்பட்டது, அன்றைய தினம் தொடர்ந்து அங்கீகரிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் மக்கள் புத்தகம் வாசிப்பு பழக்கத்தை தற்போது மேம்படுத்தி வருகிறார்கள். வாசிப்பின் சக்தியை மக்கள் அடையாளம் காண இந்த நாள் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

2025ஆம் ஆண்டு உலக புத்தக தினத்திற்கான கருப்பொருள் “உங்கள் வழியில் வாசியுங்கள்” என்பதாகும். இந்த கருப்பொருள் குழந்தைகள் மிகவும் இயல்பானதாகவும், அவர்களுக்கு ஈடுபாடானதாகவும் உணரும் வழிகளில் வாசிப்பை ஆராய ஊக்குவிக்கிறது, மகிழ்ச்சிக்காக வாசிப்பதை வலியுறுத்துகிறது மற்றும் தனிப்பட்ட விருப்பங்களை ஊக்குவிக்கிறது. ஒவ்வொரு குழந்தையின் புத்தகத்துடனான உறவும் தனித்துவமாக இருக்க வேண்டும் என்பதை இந்த கருப்பொருள் ஒப்புக்கொள்கிறது. மகிழ்ச்சிக்காக வாசிப்பை ஊக்குவித்தல், ஒவ்வொரு குழந்தைக்கும் புத்தகங்களை அணுகுவதை உறுதி செய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் வாசிப்பு ஆர்வத்தை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் உலக புத்தக தினம் வலியுறுத்துகிறது.

உலகம் முழுவதும் உள்ள எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளைக் கௌரவிக்கும் விதமாக உலக புத்தக தினம் யுனெஸ்கோ சார்பில் கடைபிடிக்கப்படுகிறது. இதன் மூலம் வாசிப்பு மீதான காதல், எழுத்து மீதான ஆர்வம், மொழிபெயர்ப்பு, ஆகியவற்றை ஊக்கப்படுத்துவது இதன் நோக்கம்.

ஒரு மனிதனுக்குப் புத்தகம் சிறந்த தோழனாக உள்ளது. உலகின் சிறந்த எழுத்தாளர்களான வில்லியம் சேக்ஸ்பியர், பிரபல ஸ்பானிஷ் வரலாற்று ஆசிரியர் இன்கா கார்சிலாசோ டி லா வேகா ஆகியோரின் நினைவு நாளாக இது அமைந்துள்ளது.

புத்தக வாசிப்பு விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்தில் யுனெஸ்கோ, சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இலக்கிய பரிசுகளை வழங்கி வருகிறது.

இந்த தினத்தில் புத்தகங்களை நன்கொடையாக வழங்குங்கள். நூலகங்கள், பள்ளிகள் அல்லது தொண்டு நிறுவனங்களுக்குப் புத்தகங்களை நன்கொடையாகக் கொடுங்கள். புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்க நண்பர்கள், உறவினர்களுக்கு உதவிடுங்கள்.

உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினமான இன்றைய தினம் வாசிப்பை ஊக்குவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகக் கருதப்படுகின்றது. ஆரம்பத்தில் பெரும் இலக்கியவாதிகளான வில்லியம் ஷேக்ஸ்பியர், மிகுவல் செர்வண்டஸ் மற்றும் இன்கா கார்சிலாசு டி லா வேகா உள்ளிட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யுனெஸ்கோவினால் ஏப்ரல் 23ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1995ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டில், உலகளாவிய ரீதியில் புத்தகங்கள் மற்றும் நூல் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முகமாக ஏப்ரல் 23ஆம் திகதி உலக புத்தக தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

புத்தகங்கள் அறிவை பரப்புவதற்கும் உலகெங்கும் உள்ள பல்வேறு கலாசாரங்களை பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தவும் சிறந்த கருவியாக உள்ளன. உலக புத்தக தினத்தில் யுனெஸ்கோவினால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு நாட்டின் தலைநகரம் உலக புத்தக நகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிகழ்வுகள் ஒழங்கு செய்யப்படும். அந்த வகையில் இந்த ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகரான ஷார்ஜா உலக புத்தக தலைநகராக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2020ஆம் ஆண்டில் உலக புத்தக மாநாடு மலேசியாவின் கோலாலம்பூரில் நடக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தகங்கள் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையில் ஒரு இணைப்பை ஏற்படுத்துவதுடன் பல தலைமுறைகளுக்கும் கலாச்சாரங்களுக்கும் இடையில் பாலமாக அமைகின்றன. புத்தகங்கள் புரட்சி பாதையில் மௌனமான ஆயுதங்கள். எழுத்தாளர்கள் தமது அனுபவத்தையும் கற்பனையையும் உலகளாவிய ரீதியில் பகிர்ந்து கொள்ளும் ஊடகமாகப் புத்தகங்கள் விளங்குகின்றன.

சமூக வலைத்தளங்களின் வருகைக்கு முன் காலைப்பொழுதின் பூபாலமாகவும் இரவுகளின் தாலாட்டாகவும் விளங்கிய புத்தகங்கள் நூலகங்களிலும் புத்தக ராக்கைகளிலும் எமது விடியலுக்கான விடைகளுடன் உறங்குகின்றன. சிறுவர்கள் முதல் வயோதிபவர் வரை தமது இரசனைக்கும் தேடுதல்களுக்கும் ஏற்ப நூல் வடிவில் சிறந்த நண்பர்களைத் தேர்ந்தெடுக்க முடியும். அவை எமது வாழ்க்கை பயணத்தில் இறுதிவரை ஒளி கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் வீடுகளில் தேவையற்றதாக கருதி நீங்கள் தூக்கி எறிந்த நூல்கள் எத்தனையோ இருக்கலாம். அவை உங்கள் உறவுகள் உங்களுக்காக விட்டுச்சென்ற சொத்துக்கள். அவற்றை ஒரு முறையேனும் தூசுதட்டி வாசித்துப் பாருங்கள்.

உங்கள் வாழ்வின் பல கேள்விகளுக்கான பதில்கள் அதில் மறைந்திருக்க வாய்ப்புள்ளது. அத்துடன் சிறுவர்களுக்குப் புத்தக வாசிப்பில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதன் மூலமாக ஒழுக்கமானதும் அமைதியானதுமான எதிர்கால சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணையலாம்.



100 வருடங்களுக்குப் பின் வத்திக்கானுக்கு

# வெளியே அடக்கம் செய்யப்படும் முதல் போப்

கடந்த 100 ஆண்டுகளில் வத்திக்கான் நகருக்கு வெளியில் நல்லடக்கம் செய்யப்படும் முதல் போப் கத்தோலிக்க திருசபையின் தலைவர் போப் பிரான்சிஸ் ஆவார்.

போப் ஆண்டவர்கள் மறைவுக்குப் பிறகு நல்லடக்க சடங்குகள் மிக விரிவாக நடப்பது வழக்கம்.

ஆனால், முந்தைய போப்களின் பிரம்மாண்ட இறுதிச் சடங்குகளைப் போல அல்லாமல், தனது இறுதிச் சடங்கு மிகவும் எளிமையான முறையில் நடைபெற வேண்டும் என்று போப் பிரான்சிஸ் விரும்பியுள்ளார். மற்ற போப்ஸ் அடக்கம் செய்யப்பட்ட புனித பீட்டர்ஸ் பசிலிக்காவின் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதை விட வத்திக்கான் நகரத்திற்கு வெளியே உள்ள புனித மேரி மேஜர் பசிலிக்காவில் தன்னை அடக்கம் செய்ய போப் பிரான்சிஸ் விரும்பியுள்ளார்.

அங்குள்ள கன்னி மரியாளின் உருவத்தின் மீது அவர் கொண்டிருந்த பக்தி காரணமாக இந்த முடிவை அவர் எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது. பிரான்சிஸ் ஒவ்வொரு முறையும் வெளிநாட்டுப் பயணத்திலிருந்து திரும்பும்போது கன்னி மரியாள் முன்பு பிரார்த்தனை செய்வது வழக்கம். அதே இடத்தில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது.



போப் பிரான்சிஸின்

## நிறைவேறாத ஆசை

மறைந்த போப் பிரான்சிஸ் இந்தியாவிற்கு வர வேண்டும் என்பதைத் தனது ஆசையாக கூறியிருந்தார்.

கடந்த 2017ஆம் ஆண்டு போப் பிரான்சிஸ் இந்திய விஜயம் இரத்தானது. அவர் பங்களாதேஷ் மியன்மாருக்கு சென்றுள்ளார்.


2025ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் இந்தியாவுக்கு வர வாய்ப்புள்ளதாகவும் இருப்பினும், அதற்கு முன்பே அவர் இந்தியா வந்திருக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால், போப் பிரான்சிஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்யவில்லை.

இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்ற அவரது வாழ்நாள் ஆசை நிறைவேறாமல் அவர் காலமானார்.

சீனா

உலக நாடுகளுக்கு

## சீனாவின் எச்சரிக்கை



சீனாவுக்கு பாதகம் ஏற்படும் வகையில் அமெரிக்காவுடன் பிற நாடுகள் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளக் கூடாது என்று எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக சீனா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

“சமரசங்கள் அமைதியைக் கொண்டு வராது. எங்களுடைய இழப்பில் உலக நாடுகள் ஆதாயம் தேட வேண்டாம்.இத்தகைய சமரச முயற்சி சர்வதேச வர்த்தகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான தீர்வாகாது” என்று தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் சீனாவுடனான வர்த்தகத்தைக் குறைத்துக் கொள்ளும்படி அமெரிக்க நிர்ப்பந்தித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி வரும் சூழலில் சீனா இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. மேலும், அமெரிக்காவுடன் இத்தகைய ஒப்பந்தங்களில் ஈடுபடும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

பறக்க தயாரான

## விமானத்தில் தீ விபத்து



புளோரிடாவில் உள்ள ஆர்லாண்டோ விமான நிலையத்தில் இருந்து புறப்படத் தயாராகிய விமானம் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

புளோரிடாவில் உள்ள ஆர்லாண்டோ விமான நிலையத்தில் இருந்து அட்லாண்டாவிற்கு கிட்டத்தட்ட 300 பேருடன் டெல்டா விமானம் புறப்படத் தயாராக இருந்தது.

அப்போது விமானம் ரன்வேயில் செல்லும்போது திடீரென என்ஜினில் தீ ஏற்பட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பான சூழல் நிலவியது. இதனையடுத்து பயணிகளை டெல்டா விமானத்தில் இருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

விமானத்திலிருந்து அவசர சறுக்குகளில் பயணிகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். காயங்கள் எதுவும் ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை.

விமான மீட்பு மற்றும் தீயணைப்பு குழு உடனடியாக விரைந்து செயற்பட்டதால் பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது.

இந்த நிலையில் தீ விபத்து தொடர்பான காணொளி தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

ஐ.பி.எல்:

# நடப்பு சம்பியன்களை வீழ்த்திய குஜராத்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), கொல்கத்தாவில் திங்கட்கிழமை (21) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொல்கத்தா

குஜராத்: 198/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 90 (55), சாய் சுதர்ஷன் 52 (36), ஜொஸ் பட்லர் ஆ.இ 41 (23), ஷாருக் கான் ஆ.இ 11 (05) ஓட்டங்கள்)

கொல்கத்தா: 159/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஜின்கியா ரஹானே 50 (36), அங்கிரிஷ் ரகுவன்ஷி ஆ.இ 27 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரசீத் கிருஷ்ணா 2/25 [4], ரஷீட் கான் 2/25 [4], சாய் கிஷோர் 1/19 [3], மொஹமட் சிராஜ் 1/32 [4])

போட்டியின் நாயகன்: ஷுப்மன் கில்.

இந்நிலையில், ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.

ஐ.பி.எல்.

பெங்களூருக்கு எதிரான

## போட்டியை தவறவிடும் சாம்சன்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருக்கெதிரான வியாழக்கிழமை (24) போட்டியை ராஜஸ்தான் றோயல்ஸின் அணித்தலைவர் சஞ்சு சாம்சன் தவறவிடவுள்ளார்.

டெல்லி கப்பிட்டல்ஸுக்கெதிரான போட்டியின்போது அடிவயிற்றுப் பகுதியில் காயமடைந்த சாம்சன் தவறவிடும் இரண்டாவது போட்டி இதுவாகும்.











## புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டு போட்டி

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் றைடர்ஸ் எசோஸியேசன் நிறுவனம் ஏற்பாடு செய்த நோன்புப் பெருநாள் விளையாட்டு போட்டிகள், புத்தளம் இஜ்திமா மைதானத்தில் சனிக்கிழமை (19) மாலை இடம்பெற்றது.

இந்த போட்டிகள் யாவும் கடந்த நோன்பு பெருநாள் தினத்தன்று இஜ்திமா மைதானத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கூட மழையின் காரணமாக இந்த போட்டி பிற்போடப்பட்டிருந்தது.

புத்தளம் நகரில் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக இந்த பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையிலே இந்த முறை நடைபெற்ற இந்த போட்டியிலே மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டர் குரோஸ் ஓட்ட போட்டிகள், அரை கரத்தை மற்றும் ரேஸ் கரத்தை ஓட்டம், வாலிபர் சைக்கிள் ஓட்டம், குதிரை ஓட்டம், முச்சக்கர வண்டி ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன.

புத்தளம் றைடர்ஸ் எசோஸியேசன் தலைவரும், பிரபல முன்னாள் தேசிய மட்ட றைடருமான எம்.எப். எம்.பைரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விலே அரசியல் பிரமுகர்கள், நன்கொடையாளர்கள், தொழில் அதிபர்கள், நலன் விரும்பிகள் என பலர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தார்கள்.

போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதியான ரொக்க பணம் பரிசாக வழங்கப்பட்டன.

## காரைதீவில் புத்தாண்டு மரதன் ஓட்டப் போட்டி

வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமுக நிலையமும் இணைந்து 27ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவை சனிக்கிழமை (19) நடத்தியது. காலை நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது.

விசுவாவசு சித்திரை வருடப்பிறப்பையொட்டியும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாகவும் நடத்தப்பட்ட போட்டிகளுக்கு, ASCO மற்றும் சொர்ணம் நகைமாளிகை இணை அனுசரணை வழங்கின.

கழகத் தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கழக போசகர்களான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் மற்றும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.









புதுடெல்லி

அமெரிக்க துணை ஜனாதிபதியின் பிள்ளைகளுக்கு

## மயில் இறகுகளை பரிசளித்த மோடி

அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் 4 நாட்கள் பயணமாக குடும்பத்துடன் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். டெல்லி வந்தடைந்த அவருக்கு மத்திய அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

பின்னர், திங்கட்கிழமை(21) மாலை அவர் பிரதமர் மோடியைச் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின்போது



ஜே.டி.வான்ஸ் அவரது மனைவியான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உஷா வான்ஸ், குழந்தைகள் இவான், விவேக், மிராபெல் ஆகியோரும் உடன் இருந்துள்ளனர்.

பிரதமர் மோடியும், ஜே.டி. வான்சும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஜே.டி. வான்சின் குழந்தைகள் பிரதமர் மோடி அருகே சென்று அவரின் மடியில் அமர்ந்து கொண்டுள்ளனர்.

இதையடுத்து, குழந்தைகளுக்குப் பிரதமர் மோடி மயில் இறகுகளைப் பரிசாக அளித்தார். அதைக் குழந்தைகள் பெற்றுக்கொண்டனர். இது தொடர்பான காணொளி தற்போது வைரலாகி வருகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 23, ஏப்ரல் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.